
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் - 54

சித்திரை - ஆனி 2014



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06

அமுதம் 14 துளி 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

ஒரு காரியத்தின் பயனில் கருத்தைச் செலுத்துமளவிற்கு அந்தக் காரியத்தைச் செய்யும் முறையிலும் கருத்தைச் செலுத்த வேண்டும். இது என்னுடைய வாழ்க்கையில் நான் கற்றுக் கொண்ட மிகப்பெரிய பாடங்களுள் ஒன்றாகும். இந்த ஒரு பாடத்திலிருந்து பல பெரிய பாடங்களை நான் எப்போதும் கற்றுக்கொண்டு வந்திருக்கிறேன். குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை, அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்த வேண்டும் என்பதில், வெற்றிக்கு உரிய எல்லா இரகசியமும் அடங்கியிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.



நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான். நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்? மேலோட்டமாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும். ஆனால் உலகிற்கு நன்மை செய்வதனால், உண்மையில் நமக்கு நாமேதான் உதவி செய்துகொள்கிறோம்.


உயர்ந்த பீடத்தில் நின்று உனது கையில் ஐந்து காசுகளை எடுத்துக்கொண்டு, “ஏ பிச்சைக்காரா! இதை வாங்கிக்கொள்” என்று நீ சொல்லாதே. மாறாக, அவனுக்குக் கொடுப்பதனால் உனக்கு நீயே உதவி புரிந்துகொள்ள முடிந்ததை நினைத்து, அந்த ஏழை அங்கு இருந்ததற்காக அவனிடம் நீ நன்றி உள்ளவனாக இரு. கொடுப்பவன்தான் பாக்கியசாலியே தவிர, பெறுபவன் அல்ல. இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையையும் இரக்க மனப்பான்மையையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்திருப்பதற்காக நீ நன்றியுள்ளவனாக இரு. இதன் மூலம் தூய்மையும் பரிபூரணத் தன்மையும் உன்னை வந்தடையும்.

***– சுவாமி விவேகானந்தர்***

*தொகுப்பு: இ. பிரகலாதன், பழைய மாணவன், (தொண்டராசிரியர்) இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை



ஓம் மதுவாதா ரிதாயதே மதுக்ஷரந்தி ஸிந்தவ:
மாத்வீர் நஸ்ஸந்த்வோஷதீ: மது நக்தமுதோஷஸி
மதுமத் பார்த்திவக்ம் ரஜ: மது த்யௌரஸ்து ந: பிதா
மதுமான் நோ வனஸ்பதிர் முதமாக்ம் அஸ்து ஸூர்ய:
மாத்கவீர் காவோ பவந்து ந:

**பொருள்:** சிறந்த செயலைச் செய்ய விரும்புகின்ற நமக்குக் காற்று இனிமையாக வீசட்டும், நதிகள் இனிய நீருடன் ஓடட்டும், செடிகொடிகள் வளம் பெற்று விளங்கட்டும், இரவும் பகலும் இனிமையைத் தரட்டும், நமது தந்தையான வானம் இனிமையாகப் பொழியட்டும், செடிகொடிகளின் அதிபதியான சந்திரன் இனிமையாக இருக்கட்டும், பசுக்கள் அதிக பாலைச் சொரியட்டும்!

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.

அமுதம் 14 துளி 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 1 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து; | 3 |
| 3. | புலமை பெறுவோம் - கவிதை | 4 |
| 4. | பஞ்சதந்திரக் கதை | 5 |
| 5. | புண்ணிய நதிகள் | 8 |
| 6. | குறுக்கெழுத்துப் போட்டி | 10 |
| 7. | அன்புள்ள எஜமான் - பாப்பா பாப்பா கதை கேளு | 11 |
| 8. | போர்க்களத்தின் தேவதை - சாதனையாளர் | 14 |
| 9. | யோகம் | 16 |
| 10. | விலை உயர்ந்த வைரம் எது? - கதை | 19 |
| 11. | ஓம் | 20 |
| 12. | அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே! | 21 |
| 13. | நீங்களும் எழுதலாம்... | 22 |
| 14. | நரேந்திரனின் பொறுப்புணர்வு - படக்கதை | 23 |
| 15. | நம்மை நாம் உயர்த்திக் கொள்வோம் - படித்துச் சுவைத்தவை | 25 |
| 16. | கலியுக கற்பகதரு | 28 |
| 17. | தாகித்தவர்களுக்குத் தண்ணீராக இரு - உண்மைச் சம்பவம். | 31 |
| 18. | ஐதரேய உபநிடதம் | 34 |
| 19. | செய்திகள் | 38 |
| 20. | உங்கள் கருத்து | 40 |


**அட்டைப் பக்கங்களில்...**


| | | |
|---|---|---|
| 1. | அட்டைப் படம் (அட்டைப் பட விளக்கம் 3ஆம் பக்கத்தில்) | |
| 2. | மக்கள் தொண்டே மகேசன் தொண்டு | ii |
| 3. | படம் தரும் பாடம் | iii |
| 4. | உங்கள் சிந்தனைக்கு... | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்புள்ள வாசகர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். மலர்ந்த இப் புத்தாண்டில் எமது மனங்களும் தூய்மை அடைந்து ஒளி பெற இறைவன் அருள் புரியட்டும்.

இறைவனது கிருபையால் எங்கள் மனம் தூய்மை அடையும். இதனைத் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் அருமையாக விளக்குகிறார். அந்த விளக்கமே இம்முறை எமது அட்டைப் படத்தின் கருத்தாய் உள்ளது. பள்ளம் நோக்கிப் பாய்வதே நீரின் இயல்பு. அழுக்கு நிலங்கள் மீது பாய்ந்து ஓடுவதால் அது மாசு-படுகிறது. அது கடலில் சேரும்போது உவர்நீராக மாறுகிறது. இந்த உவர்நீரோ மக்களுக்கு உபயோகமற்றது. ஆனால் கதிரவனோ கடல் நீரின் உவர்ப்பை நீக்கி மேலே இழுத்துக் கொள்கிறான். அந்த நீர் மேகமாக மாறி இனிய மழையாகப் பொழிகிறது. இந்த நீரைப் போலவே சஞ்சலமான எங்கள் மனமும் எப்போதும் கீழ் நோக்கிச் சென்று உலக இன்பங்களை நாடி மாசுபடுகிறது. இறைவா, எங்கள் மனதின் மாசை நீக்கி உய்விப்பாயாக.

எங்கள் மனத் தூய்மைக்கு உறுதுணையாக இருக்கும் இந்த அறநெறி அமுதத் துளியை பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

மனிதன் உலக ஆசைகளில் உழன்றுகொண்டிருக்கிறான். இந்த ஆசைகளை நிறைவேற்றிச் சலித்துப்போன பிறகு அருட்தாகம் தானாக வருகிறது.

மனிதன் ஒருவன் மிகப் பெரிய பாவத்தைச் செய்திருக்கலாம். ஆயினும் அவன் ஈசனிடத்து விசுவாசம் வைத்திருப்பானாகில் அவன் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை.

- பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமை பெறுவோம்

மாணவனே தெரிகிறதா மலருகின்ற புதுக்காலம்
காணத்தான் முடிகிறதா கற்பதற்குப் புதியவழி
வீணெனவே கழித்திட்ட விளையாட்டுத் தனம்நீங்கிச்
சாணக்யம் பெறுவதற்குச் சவாலிட்டு நடைபோடு

தீரர்களாய் ஆவதற்குத் தகுந்தவழி எந்தவழி
வீரவிவே கானந்தர் விதந்துரைத்த அந்தவழி
அரவமிட்டு ஆர்ப்பரித்து அந்தரமாய் அலையுமிந்தத்
தரங்கெட்ட கவிமனதைத் திறமையிலே குவித்துவிடு

தவிராமல் பயின்றுவிடு தளராமல் முயன்றுவிடு
புவிமீது நண்டபோடு புதியவற்றில் புலமைபெறு
குவிகின்ற மனதாலே குறிவைத்து முன்னேறு
கவிகின்ற இருள்நீங்கும் கலைமகளின் இசைகேட்கும்.



ஆக்கம்: க. **சொரூபன்,** பழைய மாணவன் (தொண்டராசிரியர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சதந்திரக் கதை



காட்டில் உள்ள ஒரு மரத்தடியில் ஒரு மானும் காகமும் நண்பர்களாய் இருந்தன. அந்தக் காட்டில் இருந்த நரி ஒன்றுக்கு அந்த மானை எப்படியாவது உணவாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசை வந்தது. அதற்கு ஒரு திட்டமும் தீட்டியது.



ஒரு நாள் நரி மானிடம், "நண்பா, இந்தக் காட்டில் தளதளவென்று நேர்த்தியான பயிர் விளைச்சல் இருக்கின்றது. அதை உனக்குக் காண்பிக்கிறேன் வருகிறாயா?" என்று அழைத்தது.

'பச்சைப் பயிர் தளதளவென்று இருக்கிறதா...' என்று மான் நாக்கில் நீர் சுரக்க, "உடனே அழைத்துப் போய்க் காட்டு" என்றது. "வா வா" என்று நரி அதை அழைத்துச் சென்று காட்டியது. காகமோ "நரியை நம்பாதே" என்று எச்சரித்தது. அநேக நாட்களுக்கு அலையாமல் உணவு இருக்குமிடம் தெரிந்தபின் மானால் வேறு இடத்திற்குச் செல்ல முடியுமா? தினமும் நேராக அந்த விளைச்சல் பகுதிக்குச் சென்று மேய ஆரம்பித்தது. ஒருநாள், இருநாட்கள், மூன்றுநாட்கள்.. என ஆறு நாட்கள் ஆயிற்று.


ஏழாம்நாள். 'எது வந்து மேய்ந்து இப்படிப் பயிர் பாழாகிறது?' என்று பதுங்கி இருந்து பார்த்தான் வயல் சொந்தக்காரன். ஒரு மான் வந்து மேய்வதைக் கண்டதும் அதைப் பிடிக்க மறுநாள் வலையைக் கட்டினான். வழக்கம்போல அடுத்தநாள் வந்த மான் வலையில் மாட்டிக் கொண்டது. உடனே அதற்கு நரியின் ஞாபகம் வந்தது. அந்த நண்பனைத் தவிர வேறு யார் வந்து இந்தச் சமயத்தில் உதவ முடியும்? என்ற தவிப்புடன் நண்பன் வருகிறானா என்று பார்த்தது. நரி வந்துகொண்டுதான் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியும் வந்தது. ஆனால் ' வயல் சொந்தக்காரன் மானை அடித்துக் கொன்ற பின் அதை நான் நன்றாக உண்ணலாம்' என்ற வஞ்சக எண்ணத்துடன் வந்தது.

"வா.. வா.. நண்பா ஏன் சும்மா இருக்கிறாய்? என்னுடைய தலையைச் சீக்கிரமாய் அறுத்து என்னை விடுவி" என்று பரபரப்புடன் வரவேற்றது மான். ஆனால் நரியோ, " ஆம், நீ சொல்வது மெய்தான். ஆயினும் எனக்கு இன்று விரத தினமாதலால் நான் இந்தத் தோல் வலையைத் தீண்ட மாட்டேன். நாளைக்கு என்ன சொன்னாலும் கேட்பேன். சினேகிதனுக்காக நான் உயிரைக்கூட விடுபவன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தது.

பகல்போய் இரவு வந்தது. ஆனால் மான் மரத்தடிக்கு வரவில்லை. அதனால் காக்கைக்கும் உறக்கம் வரவில்லை. விடிந்ததும் காகம் பறந்து பறந்து தேடியது. அந்த வயல் பக்கம் வந்தபோது வலையில் சிக்கிய நிலையில் அதைப் பார்த்ததும் அருகில் சென்றது. சினேகிதா உனக்கு இந்த அவஸ்தை ஏன் வந்தது?" என்று கேட்டது. "நண்பா இது உன் வார்த்தையைக் கேளாமையால் வந்த பலன்" என்று மான் வருத்தத்துடன் கூறியது. "உன் கூட்டாளியான நரி எங்கே போய் விட்டது?" என்று கேட்டது காகம்.



"என் இறைச்சியைத் தின்பதற்காக இங்கேதான் ஒளிந்து கொண்டிருப்பான்" என்று மான் அழுதது. "தனக்கு நன்மை செய்யும் நண்பனின் பேச்சைக் கேளாதவனுக்கு ஆபத்து சீக்கிரமே வந்து விடும்..." என்று காகம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே வயற்காரன் கையில் தடியுடன் தூரத்தில் வந்து கொண்டிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பார்த்துவிட்ட காகம், "நண்பா, அவன் வருகிறான். நான் சொல்வது போல் செய் என்றது பரபரப்புடன். "சீக்கிரம் சொல் நீதான் இந்த அபாயத்திலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என மான் உயிர் பிழைக்கும் ஆர்வத்துடன் கேட்டது. "கவனமாகக் கேள், நீ இப்போது மூச்சை அடக்கிக்கொண்டு செத்தவன் போலக் கிடந்தால் அவன் உன்னைப் பார்த்து நீ செத்துவிட்டாய் என்றெண்ணிக் கொண்டு கட்டிய வலையை அவிழ்த்துச் சுருட்டி வேறு ஒரு இடத்தில் வைக்கப் போவான். அப்போது நான் கத்துகிறேன். அதைக் கேட்ட மாத்திரத்தில் நீ மிகவும் விரைவாய் ஓட்டம் பிடி" என்றது காகம்.மான் அப்படியே நடிக்க, காகம் அதன் கண்ணைக் கொத்துவதுபோல் பாவனை செய்தது.

வயற்காரன் வந்தான். மானைப் பார்த்தான். "ஓ.. மான் செத்துவிட்டதா" என்று முணுமுணுத்தான். கட்டியிருந்த வலையை அவிழ்த்து ஓரிடத்தில் வைக்கப் போனான். உடனே "கா; கா;" என்று கத்தியது காகம். மான், பட்டென்று எழுந்து சட்டென்று ஓட்டம் பிடித்தது. ஏமாற்றத்தால் ஆத்திரமுற்ற வயற்காரன் தடியை மானை நோக்கி வீசி எறிந்தான். தடி பலமாகப் பட்டது. மான்மேல் அல்ல; மறைந்தவாறு அருகிலிருந்த நரியின் மேல். மான் பிழைத்தது; நரி செத்தது.

நல்ல நண்பர்களின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டும். தீய சுபாவம் உடையவர்கள் நண்பர்களைப்போல் இருந்தாலும் அவர்களின் இயல்பு எமக்கு ஆபத்தைக் கொண்டு வரும். எனவே தீய இயல்புடையோரிடமிருந்து ஆரம்பத்திலேயே விலகிக் கொள்வது நல்லது.



உன்னை விட உயர்வான ஒரு மனிதரைத் தவிர மற்றவருடன் ஒரு போதும் நட்புக் கொள்ள வேண்டாம்.

- கன்பூசியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வட இந்தியப் பஞ்சாங்கத்தின் படி சைத்ரமாதம் (சித்திரைமாதம்) கிருஸ்ண பட்சம், ஷஷ்டி திதி நண்பகலில் யமுனை நதி உருவம் பெற்றுப் பூமியை அடைந்தாள் என்று பத்ம புராணம் கூறுகிறது. இச்சுபதினம் ஒவ்வொருஆண்டும் மார்ச் 15 - ஏப்ரல் 15இற்கு இடையில் வரும். இதற்கு யமுனாஜெ-யந்தி என்று பெயர். இந்த நாளை வட மதுரைவாசிகள் வெகு கோ-லாகலமாகக் கொண்டாடுகின்றனர்.

யமுனை நதியின் பிறப்பிடத்தை நுணுக்கமாகக் குறிப்பிட இயலாது. எனினும் அது உற்பத்தியாகும் மலையை நாம் பார்க்க முடியும். உத்தராஞ்சல் மாநிலத்தில், கடுவால் மாவட்டத்திலுள்ள இமயமலைப் பகுதியில் 3463அடிஉயரம் கொண்ட 'பந்தர் பூஞ்ச்' (வானரவால்) என்ற பெரும் மலைத் தொடர் உண்டு. இதன் பின் பக்கத்திலுள்ள 'காளிந்தி' எனும் பனிமலைச் சிகரத்திலிருந்தே யமுனை உற்பத்தியாகின்றது என்பது பலரது அபிப்பிராயம். இதை ஸுமேருபர்வதம் என்றும் சொல்வது உண்டு. யமுனையின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து 6.5 அடி தூரத்தில் கீழே தென்படும், இந்த நதிக்கரையிலுள்ள முதல் புனித தலத்திற்கு யமு-




னோத்ரி என்று பெயர். யமுனை வடக்குநோக்கிப் பாயும் இடம் என்பதால் யமுனோத்ரி (யமுனை + உத்திரி) என்ற பெயர் ஏற்பட்டது. இங்கிருந்து பந்தர் பூஞ்ச் மலைத் தொடரை நோக்கினால் இரண்டு உயர-மான நீர்வீழ்ச்சிகளைக் காணமுடியும். இவைகளை யமுனை என்றும் ஜானவி என்றும் கூறுகின்றனர். இவ்விரண்டு நீர்வீழ்ச்சிகளும் ஆறாகப் பெருகி யமுனோத்ரி தலத்தில் ஒன்று சேர்ந்து யமுனை என்ற பூரணநதியாக உருவெடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமுனோத்ரி ஷேத்திரத்தில் யமுனை அம்மனுக்குக் கோயில் உண்டு. ஒரு சிறிய கட்டிடமாக விளங்கும் இக் கோயிலில் யமுனாதேவி சதுர்ப்புஜங்களோடு பத்மாசனத்தில் அமர்ந்து அருள்பாலிக்கின்றார். யமுனோத்ரியில் ஒரு ஆஞ்சநேயர் கோயிலும் உண்டு. எங்குமே காணக் கிடைக்காத அபூர்வமான ஒரு காட்சியை யமுனோத்ரியில் காணலாம். பனிமலைப் பிரதேசமாக இருந்தும் அங்குள்ள பாறை வெடிப்புகளில் இருந்து கந்தகம் கலந்த வெந்நீர் ஊற்றுக்கள் பல படுவேகமாகப் பீறிட்டுவருகின்றன. அங்குள்ள மிதமான சூடுள்ள ஒரு குண்டத்தில் யாத்திரிகர்கள் நீராடுகின்றனர்.




கொதிக்கும் நீர் கொண்ட சூரியக்குண்டத்தில் ரொட்டியைத் தட்டிப் போட்டால் ஒரு நிமிடத்தில் வெந்து மேலே-வருகிறது. ஒரு துணியில் உருளைக் கிழங்கையோ அல்லது அரிசியையோ இட்டு மூட்டைகட்டி, அதை ஒரு கோலில் கட்டி, அந்தக் கோலை சூரியக் குண்டத்தில் அமிழ்த்திப் பிடித்தால் ஓரிரு நிமிடங்களில் அவை வெந்து பதமாக வருகின்றது. இதையே யமுனாதேவிக்கும் பிரசாதமாகப் படைத்து வழிபடுகின்றார்கள். சூரியக்குண்டத்திற்கு அருகிலுள்ள தெய்வீகப் பாறை ஒன்றை 'திவ்யஷிலா' என்று கூறுகின்றார்கள். மேமாதம் அட்சய திருதியை நாளில் திறக்கப்படும் யமுனை அம்மன் கோவில் நவம்பர் இறுதி வரை திறக்கப்பட்டிருக்கும். மற்றக் காலங்களில் பனிமழை உக்கிரமாக இருப்பதால் இப் பிரதேசத்தில் மனித ஆரவாரமே கிடையாது.

1380 அடி நீளமுள்ள யமுனையின் இரு புறங்களின் கரை-களை ஒட்டி ஏராளமான புனிதத் தலங்களும் சரித்திரப் புகழ் பெற்ற நகரங்களும் இருக்கின்றன. இவ்வாறு பல நகரங்களைக் கடந்து வரும் யமுனை கடைசியாக 'அலகபாத்' எனும் இடத்தை அடைந்து கங்கை, சரஸ்வதி எனும் நதிகளோடு சங்கமமாகிறாள்.

ஆக்கம்: **சோ. பிரசோபிதா**, *பழைய மாணவி (தொண்டராசிரியை), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி



*விடைகள் அடுத்த இதழில்...*

**இடமிருந்து வலம்**

1. இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் பொதுவான பண்டிகையைக் கொண்ட மாதம்
3. சுவாமி இராமகிருஷ்ணானந்தரின் பிள்ளைத் திருநாமம் (வலமிருந்து இடம்)
5. "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" - உலக____
7. மனதில் ____ வேண்டும்
8. சந்நியாசம் பெற்றோர் அணியும் உடை
9. இராமன் பதினான்கு வருடங்கள் இங்கே சென்றார் (குழம்பி)
11. திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட தலம்

**மேலிருந்து கீழ்**

1. ஆறுவது ____
2. சிவ சின்னங்களில் ஒன்று
4. ____ தீர்க்கும் சனி பகவான்
6. தெற்கு திசையின் ____ இயமன் (குழம்பி)
7. செய்யாமல் செய்த ____க்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது (குழம்பி)
8. விஸ்வநாதர் உறையும் ஷேத்திரம்

ஆக்கம்: வ. வானதி, பழைய மாணவி (தொண்டராசிரியை), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா பாப்பா கதை கேளு...



தன் ஒட்டகத்தின் மீது ஏறி அமர்ந்தபடி பாலைவனம் வழியாகச் சென்று கொண்டிருந்தான் சுல்தான். அப்போது பாலைவனத்தில் ஒரு குதிரையும், ஒரு இளைஞனும் மயக்கமுற்றுக் கிடந்தனர். சுல்தான் உடனே தன் ஒட்டகத்தைவிட்டுக் கீழே இறங்கினான். தன் மேலே தோளில் தொங்கிக் கொண்டிருந்த குடுவையிலிருந்து தண்ணீரை எடுத்து மயக்கமுற்ற இளைஞனின் முகத்தில் தெளிக்கச் செய்தான்.

சுல்தானின் ஒட்டகம் அதனைக் கவனித்தது. "எஜமானே! இந்த மனிதன் திருடன் போன்று தெரிகிறான். இவனது மயக்கத்தைத் தெளிய வைத்தால் இவனால் உங்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படக்கூடும். அதனால் இவனை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுங்கள்" என்றது.

## அன்புள்ள எஜமான்

சுல்தான் அன்போடு தன் ஒட்டகத்தைப் பார்த்தான். "ஒட்டகமே! துன்பத்தில் தவிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று அல்லா கூறியிருக்கின்றார். இவனை இப்படியே விட்டால் இன்னும் சிறிது நேரத்தில் இந்த இடத்திலேயே இறந்தாலும் இறந்துவிடுவான். இவனோடு இவன் குதிரையும் இறந்துவிடும். நாம் இவனுக்கும், இவன் குதிரைக்கும் உதவி செய்தால் இரு உயிர்களையும் காப்பாற்றிய புண்ணியம் நம்மைச் சேரும்." என்றான்.

சுல்தானின் பேச்சைக் கேட்ட ஒட்டகம் அமைதியானது. உடனே சுல்தான் இளைஞனின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் குதிரையின் மீது தண்ணீரைத் தெளித்தான். இளைஞனுக்கும் குதிரைக்கும் சிறிது தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தான். தண்ணீரைக் குடித்த இளைஞனும் குதிரையும் மயக்கம் தீர்ந்து எழுந்தனர்.

இளைஞன் நன்றியோடு சுல்தானைப் பார்த்தான். "ஐயா! நல்ல நேரத்தில் உங்கள் கருணைப் பார்வை என் மீது பட்டது. அதனால் என்னை நீங்கள் காப்பற்றினீர்கள். இல்லையேல் நானும் என் குதிரையும் இந்தப் பாலைவனத்திலேயே இறந்திருப்போம். உங்கள் உதவிக்கு மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் உயிரைக் காப்பாற்றிய உங்களுக்கு ஏதாவது அன்புப் பரிசு கொடுக்கவேண்டும் என்று நினைக்கிறேன். இதோ என்னிடம் இருக்கின்ற இந்தப் பணமுடிப்பினை உங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கின்றேன்; பெற்றுக் கொள்ளுங்கள்" என்று தன்னிடமிருந்த பணமுடிப்பினை சுல்தானின் முன் நீட்டினான் அந்த இளைஞன்.



"இளைஞனே! இந்தப் பணமுடிப்பு உனக்கு எப்படிக் கிடைத்தது என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான் சுல்தான். "ஓ! தாராளமாக அறிந்து கொள்ளலாம். இந்த பாலைவனத்தை ஒட்டிய கிராமத்தினை ஒரு திவான் ஆண்டு கொண்டிருக்கின்றார். அவர் வீட்டிலிருந்து இந்தப் பொற்காசுகளைத் திருடி வந்தேன்" என்றான் இளைஞன்.




"இளைஞனே! நான் உன் உயிரையும், உன் குதிரையின் உயிரையும் காப்பாற்றியதற்காக இந்த பணமுடிப்பைத் தவிர வேறு என்ன கேட்டாலும் அதனைக் கொடுப்பதற்கு நீ தயாராக இருக்கின்றாயா?" என்று கேட்டான் சுல்தான். "ஆம்! தயாராக இருக்கின்றேன். உங்களுக்காக என் உயிரைக்கூடத் தரத் தயாராக இருக்கின்றேன்" என்றான் இறைஞன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளைஞனே! உன் உயிரைக் காப்பாற்றியவன் நான் அல்லவா? அதனை மீண்டும் உன்னிடம் எப்படிப் பெறமுடியும்? ஆனால் நீ மனது வைத்தால் ஒன்றைச் செய்யலாம். நீ எனக்கொரு வாக்குக் கொடுக்க வேண்டும். இன்று முதல் நீ 'எங்கேயும் திருட மாட்டேன்' என்று எனக்கு வாக்குக் கொடுக்க வேண்டும். நீ என் மீது உண்மையிலேயே அன்பு வைத்திருக்கிறாய் என்றால் இதனை நீ ஏற்றுக் கொள்வாய் என்று நினைக்கிறேன்" என்றான் சுல்தான். உடனே அந்த இளைஞன் சுல்தானின் காலில் விழுந்து நமஸ்கரித்தான். "ஐயா! இனிமேல் நான் எக்காரணம் கொண்டும் திருடமாட்டேன். திருடுவதை விட்டுவிட்டு உழைத்து உண்டு வாழ்க்கை நடத்துவேன். உங்களைச் சந்தித்தது என் வாழ்க்கையில் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்திவிட்டது" என்று மகிழ்ச்சியுடன் கூறியபடி விடை பெற்றுச் சென்றான்.



அதனைக் கவனித்த ஒட்டகம், "எஜமானே! தாங்கள் இந்தத் திருடனை காப்பாற்றியது மட்டுமல்லாமல், திருத்தியும் விட்டீர்களே! உங்கள் அறிவுக்கு நான் தலை வணங்குகிறேன்." என்றது.

**பிறருக்கு எம்மால் இயன்ற அளவு நன்மை செய்யவேண்டும்.**

தொகுப்பு: **க. கலைவாணி**, பழைய மாணவி (தொண்டராசிரியை), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.



*என் குழந்தைகளே! இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள், அறியாமையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள்.*

*மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவாவது நன்மை செய்வதற்காக அழிந்து போவதுகூட மிகவும் நல்லது.*

*- சுவாமி விவேகானந்தர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனையாளர்

கிளாரா பார்ட்டன் ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் ஒக்ஸ்பேர்ட் (Oxford) எனும் இடத்தில் பிறந்தார். இவருக்கு சிறுவயது முதலே மற்றோருக்கு உதவ வேண்டும் என்ற குணம் இருந்தது. இவர் காயப்பட்டிருந்த விலங்குகளையும் சுகவீனமுற்றிருந்த தன் சகோதரனையும் பார்த்துக் கொண்டார். இவருக்கு வீட்டிலேயே கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டது. இவர் எப்போதும் புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார்.



இளமைப் பருவத்தை அடைந்ததும் ஒரு ஆசிரியையாகப் பணியாற்றத் தொடங்கிய இவர் 14 வருடம் கடமையாற்றினார். இவருக்கு மாணவர்களின் பெற்றோரே சம்பளம் வழங்கினர். சில மாணவர்களின் பெற்றோருக்கு வருமானம் குறைவானதால் பிள்ளைகளைப் பாட-சாலைக்கு அனுப்புவதை நிறுத்தினர். இதனால் கவலை அடைந்த கிளாரா, அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகக் கல்வி கற்பிக்க ஆரம்பித்தார். இதனால் இவருக்கு நகரில் கல்வி கற்பிக்க இடம் கொடுத்தனர். அப்போது இவரிடம் மிக விரைவில் 600 மாணவர்கள் சேர்ந்து கொண்டனர்.

### போர்க்களத்தின் தேவதை

சிறிது காலத்தின் பின் ஆசிரியர் தொழிலை விட்டு விட்டு அலுவலகம் ஒன்றில் எழுதுவினைஞராகக் கடமையாற்றத் தொடங்கினார். இவர் பெண் ஆதலால் இவருக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. அவர் நேரடியாக மேலதிகாரியிடம் சென்று தனக்கும் மற்ற ஆண் எழுதுவினைஞர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அப்போது உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கவே இவருக்கு இராணுவ வீரர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அவர் தனது எழுதுவினைஞர் வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு மக்களிடம் சென்று, போரில் காயப்பட்டோருக்கு வைத்தியம் செய்ய நிதி திரட்டத் தொடங்கினார். நிதியின் மூலம் காயப்பட்டோருக்கு துணி வகைகளைக் கொண்டு காயத்திற்குக் கட்டுப்போடும் துணிகளை (bandage) செய்து அவர்களுக்கு உதவினார்.



இவருக்கு, யுத்தம் நடக்கும் போது யுத்த பூமிக்கு நடுவே சென்று காயப்பட்டோருக்கு உதவி செய்ய அரசாங்கம் அனுமதி தந்தது. இவர் '*யுத்த பூமியின் தேவதை*' எனவும் போற்றப்பட்டார். இவர் இராணுவ வீரர்களுக்கு உணவு சமைத்துக் கொடுத்தும், காணாமற் போன வீரர்களைத் தேடியும் அவர்களுக்கு வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

ஐரோப்பிய நாடுகளில் போரில் காயமுற்றோரைக் கவனிக்கும் செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross) எனும் நிறுவனத்தைப் பற்றிக் கிளாரா அறிந்தார். அதனால் வழங்கப்படும் சேவையைப் பற்றியும் அறிந்த அவர் அமெரிக்காவிலும் அதை நிறுவினார். இதுதான் அமெரிக்காவின் முதலாவது செஞ்சிலுவைச் சங்கம் ஆகும். இந் நிறுவனம் இராணுவ வீரர்களுக்கு மட்டுமன்றி, சாதாரண மக்களுக்கும் தேவை என அறிந்த அவர், மற்றோருக்கும் சேவைகளை வழங்கத் தொடங்கினார். இவர் இதன் தலைவராக 23 வருடம் கடமையாற்றினார். கிளாரா பார்ட்டன் 1821ஆம் ஆண்டு பிறந்து 1912ஆம் ஆண்டு மறைந்தார்.




கிளாரா பார்டன் ஆரம்பத்திலிருந்தே சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையுடன் இருந்திருக்கிறார்.

(மிகுதி 18ஆம் பக்கத்தில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யோகம்

கடந்த இதழில் சூரிய நமஸ்காரத்தின் முதல் இரண்டு நிலை-களையும் பார்த்தோம். இந்த இதழில் அடுத்த மூன்று நிலைகளைப் பார்ப்போம். அதாவது மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் நிலைகள்.

**மூன்றாம் நிலை:**

1. செய்முறை:

- உள்ளங்கைகளைப் பாதங்களை ஒட்டி வெளிப்புறம் தரையில் அழுத்தி வைக்கவும்.
- வலது முழங்காலை முன்புறம் மடக்கி உள்மூச்சு எடுத்தபடி கைகளின் வலிமையில் நெஞ்சு நிமிர்ந்த நிலையில இருக்க, 45 பாகை கோணத்தில் பார்க்க வேண்டும்.
- வலது தோளின் முன்புறத்தினை ஒட்டி வலது முழங்காலை வைக்க வேண்டும்.
- இடது காலைப் பின்புறம் நேராக நீட்டி, இடது பாதத்தின் முன்புறமும் முழங்காலும் தரையைத் தொட்டவாறு இருக்க வைத்திருக்க வேண்டும்.



2. சுவாச நடை: உள் மூச்சு

3. நுண்ணிய விடயங்கள்:

- உள்ளங்கைகளும் வலது பாதமும் ஒரே நேரில் இருக்குமாறு வைத்திருத்தல் வேண்டும்.
- கழுத்தைக் கீழே வளைப்பதும் பார்வை கீழ் நோக்கி இருப்பதும் தவறு.

4. பலன்கள்:


- சூரிய நாடியினைத் தூண்டிவிடுவதன் மூலமாக நரம்பு மண்டலம் வலிமை பெறுகிறது.
- பார்வை கூர்மை பெறும்.
- தைரொய்ட் சுரப்பிகள் வலிமை பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் நிலை:

1. செய்முறை:
   - மடக்கி வைத்துள்ள வலது காலைப் பின்புறம் நேராக நீட்டவும்.
   - உடல் இலேசாக சாய்ந்த நிலையில், உள்ளங்கைகள் மற்றும் கால் பாதத்தின் முன்புறம் என்பன தரையைத் தொட்டவாறு நிறுத்தவும்.
   - வெளி மூச்சு விட்டபடி, பார்வை தரையை நோக்கியவாறு இருக்கவும்.



2. சுவாச நடை: வெளி மூச்சு
3. நுண்ணிய விடயங்கள்:
   - கழுத்து மற்றும் தண்டு வடத்தை வளைக்கக் கூடாது.
   - முழங்கைகள் மற்றும் முழங்கால்கள் மடங்கக் கூடாது.
4. பலன்கள்:
   - உள்ளங்கைகள், மணிக்கட்டு மற்றும் முழங்கைகள் வலிமை பெறும்.
   - தோள்கள் உறுதியடையும்.
   - தண்டுவடம் நன்கு தளர்த்தப்படும்.
   - உடலும் மனமும் சமநிலையில் நிறுத்தப்படும்.

ஐந்தாம் நிலை:


1. செய்முறை:
   - முழங்கால்களை முன்னோக்கி மடக்கித் தரையைத் தொடவும்.
   - மூச்சு வெளிவிட்டபடி உடலை முன்னோக்கி வளைத்து குதிக்கால்களின் மேல் பிருஷ்டபாகத்தினை அமர்த்தவும்.
   - தலை, கழுத்து மற்றும் தோள்களைத் தளர்த்தி, நெற்றி முன்புறம் தரையைத் தொட்டவாறு இருக்கவும்.
   - கைகள் முன்புறம் நீட்டியவாறே இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சுவாச நடை: வெளி மூச்சில் தொடங்கி உள் மூச்சு எடுத்து உடலைத் தளர்த்தவும். (சாதாரண சுவாசம்)

3. நுண்ணிய விடயங்கள்:

- நெற்றி தரையைத் தொடவேண்டும் என்பதற்காக பிருஷ்ட பாகத்தை மேல் நோக்கி தூக்கக்கூடாது.



- குதிக்கால்களின் மேல் அமர்ந்த வண்ணம் உடலை முடிந்தவரை முன்புறம் மெதுவாக வளைக்கவும்.

4. பலன்கள்:

- நுரையீரல்கள் உறுதி பெறும்.
- வயிறு மற்றும் ஜீரண மண்டலம் சீராகும்.
- தலைக்கு இரத்த ஓட்டம் அதிகமாகும்.
- மலட்டுத் தன்மை நீங்குதல் போன்ற சசாங்காசனத்தின் அற்புதமான பலன்களையும் பெறமுடியும்.

அடுத்து வரும் இதழ்களில் மிகுதி நிலைகளை எதிர் பாருங்கள்.

தொகுப்பு: **இ. பிரகலாதன்,** பழைய மாணவன், (தொண்டராசிரியர்) இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

(15ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

ஒரு பெண்ணின் தியாகத்தாலும் இரக்க குணத்தாலும் விடாமுயற்சியாலும் மாத்திரமே இவ்வாறான பாரிய நிறுவனத்தைத் தன் தாய்நாட்டில் ஸ்தாபிக்க முடிந்தது. நாமும் அவரைப்போல் விடாமுயற்சியும் தியாக உள்ளமும் உள்ளவர்களாக வாழ்ந்தால் எம்மாலும் அவரைப்போல் சாதனையாளராக முடியும்.

ஆக்கம்: **லோ. ராகுல்,** தரம் 9,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை உயர்ந்த வைரம் எது?

அவர் முக்காலமும் உணர்ந்த ஒரு துறவி. ஒரு நாள் ஒரு நாட்டின் வழியாக நடந்து சென்றார். அவரின் பெருமையை அறிந்த அந்நாட்டு மன்னன் உடனே சென்று துறவியைத் தனது அரண்மனைக்கு வருகை தருமாறு அழைத்தான். துறவியும் அரசனது திருப்திக்காக அரண்மனைக்குச் சென்றார்.



அங்கே ஏகப்பட்ட உபசாரங்களை அரசன் அவருக்குச் செய்தான். ஆடம்பரமான அரண்மனை உபசாரங்களில் பெருமளவு பணம் வீணாவதைத் துறவி அவதானித்தார். அவ்வளவும் மக்களின் வரிப்பணம் அல்லவா! இது துறவியை வருத்தியது.

துறவி விடைபெறும்போது மன்னன் தனது பொக்கிஷ அறையை ஆசீர்வதிக்க வேண்டி அவரை அங்கே அழைத்துச் சென்றான். அங்கே பெருமளவு பாதுகாப்புடன் ஒரு வைரக்கல் இருப்பதைத் துறவி கண்டார். "சுவாமி இதன் மதிப்பு மிக அதிகம். இது போன்ற கல் வேறு எந்த நாட்டு அரசனிடமும் இல்லை" என்றான் மன்னன். இதைக் கேட்ட துறவி மன்னனிடம் ஒரு கேள்வி கேட்டார். "அரசே, இதன் மதிப்பு அதிகம் என்றால் இந்தக் கல்லால் நாட்டுக்கு ஒரு வருடத்தில் எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?" துறவியின் அறியாமையை நினைத்து உள்ளுக்குள் சிரித்த மன்னன்,"சுவாமி இதனால் வருமானம் வராது. நிறைய வீரர்களைக் கொண்டு இதனைப் பாதுகாப்பதால் ஆண்டுக்கு ஆயிரம் பொற்காசுகள் செலவாகிறது"என அக் கல்லின் பெருமதியைப் பெருமையாகக் கூறினான்.துறவி,"அரசே, இதைவிட விலையுய-ர்ந்த கல் ஒன்றை நான் உனது நாட்டிலேயே பார்த்தேனே! என்னுடன் வந்தால் உனக்கும் அதைக் காட்டுகிறேன்"என்றார். அரசன் திகைத்தான். 'இதைவிட விலையுயர்ந்ததா? அதுவும் எனது நாட்டிலா!' என்று எண்ணியவாறு துறவி அழைத்துச் சென்ற இடத்திற்குப் போனான். (மிகுதி 37ஆம் பக்கத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'ஓம்' என்ற பிரணவ மந்திரம், மந்திரங்களுள் எல்லாம் தலை சிறந்தது; சக்தி வாய்ந்தது. 'ஓம்' என்ற ஒலி பிரணவம் என்றும் சொல்லப்படுகிறது. பிரணவம் என்பதன் கருத்து "அது உயிரை ஊடுருவுகிறது அல்லது பிராணன் என்ற மூச்சின் ஊடே ஓடுகிறது" என்பதாகும்.

'ஓம்' ஆத்மாவைக் குறித்து நிற்கிறது. ஆத்மா பரம்பொருள். இரண்டற்ற அத்வைதப் பொருள். இந்த ஆத்மா நான்கு நிலைகளில் அறியப்படுகிறது. அவை முறையே விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் மற்றும் துரிய நிலையாகும். இந்த நிலைகள் 'ஓம்'இலுள்ள அ, உ, ம் என்ற மூன்று ஒலிகளால் குறிப்பிடப்படுகின்றன. தொடரும் ஒலியற்ற மௌனமே அந்த ஒலியைச் சூழ்ந்து நிற்கிறது.

பிரம்மாவைக் குறிக்கும் 'அ' - ஒலி விழிப்பு நிலையைக் குறிக்கின்றது. திருமாலைக் குறிக்கும் 'உ' - ஒலி கனவு நிலை-யைக் குறிக்கின்றது. சிவனைக் குறிக்கும் 'ம்' - ஒலி ஆழ்ந்த உறக்க நிலையைக் குறிக்கின்றது. 'அ' வின் மேலே விழிப்பு நிலையை ஏற்றிக் கூறுவதன் காரணம் விழிப்பு நிலை மூன்று நிலைகளிலும் முதல் நிலை ஆகும். அதேபோல் 'அ' வும் மூன்று ஒலிகளிலும் முதல் ஒலியாகும். கனவு நிலை எனப்படுவது விழிப்பு நிலைக்கும் ஆழ்ந்த உறக்க நிலைக்கும் இடையே ஏற்படும் நிலையாகும். அதேபோல் 'உ' ஒலி 'அ' வுக்கு அடுத்துவரும் ஒலியாகவும், மேலும் 'அ' வுக்கும் 'ம்' இற்கும் இடையே வருவதாகவும் அமைந்துள்ளது. 'ம்' இன் மேல் ஆழ்ந்த உறக்க நிலை ஏற்றிக் கூறப்படுகிறது.




(மிகுதி 30ஆம் பக்கத்தில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே!

-சுவாமி விவேகானந்தர்-

விதவையின் கண்ணீரைக் கண்டும், அனாதையின் அழுகுரலைக் கேட்டும், சற்றும் நிற்காமல், தான் செல்லும் வழியிலுள்ள அனைத்தையும் நசுக்கிக் கொண்டு உருண்டு ஓடும் 'காரணம்' என்னும் சக்கரத்தின் அடியில் எறியப்பட்ட புழுவைப் போன்று எல்லாத் துன்பங்களாலும் அலைக்கழிக்கப்பட்ட, நம்பிக்கை இழந்த நெஞ்சின் அடித்தளத்திலிருந்து "நம்பிக்கையே கிடையாதா? தப்பிக்க வழியே கிடையாதா?" என்ற குரல் எழுந்து மேலே சென்றது. அந்தக் குரல் கருணைத் திருவுருவின் அரியாசனத்தை அடைந்தது. அங்கிருந்து நம்பிக்கையும் ஆறுதலும் அளிக்கும் சொற்கள் கீழே வந்தன. அவை ஒரு வேத முனிவரைக் கிளர்ந்தெழச் செய்ய, அவர் எழுந்து நின்று உலகோரைப் பார்த்துக் கம்பீரத் தொனியுடன் பின்வரும் செய்தியை முழங்கினார்: "ஓ அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே! கேளுங்கள். உயர் உலகங்களில் வாழ்பவர்களே! நீங்களும் கேளுங்கள். அனைத்து இருளையும், அனைத்து மாயையையும் கடந்த ஆதி முழுமுதலை நான் கண்டுவிட்டேன். அவரை அறிந்தால்தான் நீங்கள் மீண்டும் இறப்பிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள்."



"அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே!" ஆ! எவ்வளவு இனிமையான, எவ்வளவு நம்பிக்கை ஊட்டும் பெயர்! அருமைச் சகோதரர்களே! அந்த இனிய பெயரால் உங்களை நான் அழைக்க அனுமதி தாருங்கள். அழியாத பேரின்பத்தின் வாரிசுகளே! ஆம், உங்களைப் பாவிகள் என்று அழைக்க இந்து மறுக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஆண்டவனின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமானவர்கள். பூரணர்கள். வையத்துள் வாழும் தெய்வங்களே! நீங்களா பாவிகள்? மனிதர்களை அப்படிச் சொல்வதுதான் பாவம். மனித இயல்புக்கே அது அழியாத களங்கம். சிங்கங்களே, வீறு கொண்டு எழுங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். நீங்கள் அழியாத ஆன்மாக்கள், சுதந்திரமான, தெய்வீகமான, நிரந்தரமான ஆன்மாக்கள்!



எனவே வாருங்கள்! பேரின்பத்தின் பிள்ளைகளே! ஆனந்தத்தின் பொக்கிஷங்களே! ஆடுவோம் ஆனந்தமாக... தன்னம்பிக்கையோடும் இறைநம்பிக்கையோடும் ஆடுவோம் ஆனந்தமாக... வாருங்கள்!

**நீங்களும் எழுதலாம்...**

*அறநெறி அமுதத்தில் நீங்களும் எழுத விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:*

மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பயன்படக்கூடிய


1. கதை
2. கட்டுரை
3. படித்துச் சுவைத்தவை
4. கேட்டுச் சுவைத்தவை
5. உண்மைச் சம்பவங்கள்

ஆகியவற்றை எழுதி "அறநெறி அமுதம்" எனக் குறிப்பிட்டு முன் அட்டையில் உள்ள முகவரிக்கு அனுப்பவும். பொருத்தமான ஆக்கங்கள் உரிய திருத்தங்களுடன் பிரசுரிக்கப்படும். ஆக்கத்தை அனுப்பும்போது உங்களைப்பற்றி விபரத்தையும் எழுதி அனுப்புங்கள். இதழாசிரியர்களின் முடிவே இறுதியானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரேந்திரனின் பொறுப்புணர்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த உலகம் மிகப் பெரிய ஓர் பயிற்சிக் கூடம். இங்கு நாம் நம்மை வலி-மையுடையவர்கள் ஆக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம். இந்த உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து நீ தப்பி ஓட முயலாதே.

~சுவாமி விவேகானந்தர்

சித்திரம்: சி. கிருசாந்தினி,
பழைய மாணவி, (தன்னார்வத் தொண்டர்)
இராமகிருஷ்ணமிஷன் சமய பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள்

## படித்துச் சுவைத்தவை

- சுகமான சூழலுக்கும், இதமான சொல்லுக்கும் எத்தனை முறை ஏங்கி, அது கிடைக்காமல் மனம் உடைந்து போயிருக்கிறோம்?
- பிறருக்குக் கொடுக்கும் நிலையில் எத்தனை முறை இருந்திருக்கிறோம்? பிறரிடமிருந்து பெறும் நிலையில் எத்தனைமுறை இருந்திருக்கிறோம்?
- மற்றவர்களும், சூழ்நிலையும் முரண்பட்டதாக இருக்கும்போது நாம் எப்படி நடந்துகொள்கிறோம்?
- நாம் மட்டும் ஏன் பொறுப்புக்களை ஏற்க வேண்டும்? ஏன் பிறரை மன்னிக்க வேண்டும்? என்ற கேள்விகள் நமக்கு வருகிறதல்லவா?



- நாம் ஏன் மற்றவர்களுக்காக யோசிக்க வேண்டும்? பிறருக்கு நன்மை செய்வதால் நமக்கு என்ன இலாபம்? என்று தோன்றுகிறதல்லவா?

## நம்மை நாம் உயர்த்திக் கொள்வோம்

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிந்தால், வாழ்க்கையின் பல சவால்களை எளிதாக எதிர்கொள்ளலாம்; பலரும் நம்மை நேசிக்கும் வண்ணம் சிறந்த வாழ்க்கை வாழலாம்; வெற்றியாளர்கள் ஆகலாம். அதற்கான காரணங்களை நோக்குவோமானால் அவையாவன:-

இன்றைய மனிதனின் பல பிரச்சினைகளுக்குக் காரணம், அவன் வாழ்க்கை எனும் நீரோட்டத்தைத் தடுத்து நிற்பதுதான். எதுவரை போராட்டம்? எங்கு ஏற்றுக்கொள்வது? என்ற அடிப்படை விஷயங்கள் அவனுக்குப் புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ளாமல், வெளியில் இருப்பவற்றைச் சரி செய்து பிரச்சினைகளைத் தீர்க்கப் பார்க்கிறான். நிஜத்தை விட்டு நிழலைத் தேடி ஓடுவது போல, அரசிளங்குமாரர்களைப்போல் இருக்க வேண்டிய நாம், பிச்சைக்காரர்களைப்போல் எதையோ தேடி அலைகிறோம். நிறைவு, பொறுமை, ஏற்றுக்கொள்ளுதல், அனுசரித்தல், விட்டுக்கொடுத்தல் என்ற அரிய பண்புகள் மறக்கப்பட்டுவிட்டன.

நம்மை நாம் உயர்த்திக் கொள்வது என்பதே இவை அனைத்திற்கும் தீர்வாகும். நாம் உயரும்போது, நம் வாழ்க்கை விரியும்போது, வாழ்க்கையின் தடைக்கற்கள் சிறியதாகி விடுவது இயற்கையன்றோ? நமது அணுகுமுறையை மாற்றிக்கொண்டு உயர்ந்த பண்புகளோடும் சிறந்த குணங்களோடும் வாழும்போது நம் வாழ்க்கை நம் கையில்; நாம் வாழ்க்கையின் கையில் சிக்கித் தவிக்க வேண்டாம்.

சாதனையாளர்கள் வாழ்வில் எப்பொழுதும் சாதகமான சூழ்நிலைகள் அமைவது இல்லை. அவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையையும், தமது அசாதாரணமான அணுகுமுறையால் தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்கின்றனர் என்பதுதான் உண்மை. அப்படித் தன் பண்பால், குணத்தால், அணுகுமுறையால் வாழ்க்கையை அன்புச்சுரங்கமாய், அமைதிப் பூங்காவாய் மாற்றிக்கொண்டவர்தான் அன்னை ஸ்ரீ சாரதாதேவியார். அவரிடம் இருந்து இந்த வாழ்க்கைப் பாடங்களை நமதாக்கிக் கொள்வோம்.



கொல்கத்தாவிலிருந்து நிறைய பக்தர்கள் அன்னை ஸ்ரீ சாரதா தேவியைப் பார்க்க ஜெயராம்பாடி கிராமத்துக்கு வருவார்கள். அவர்களில் பலர் மிக வசதியாக வாழ்பவர்கள்; கிராமத்து வாழ்க்கைக்குப் பழக்கமற்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க அன்னை, நிறையச் சிரமப்பட வேண்டியிருக்கும். ஆனால் அவரோ அவற்றை மிக மகிழ்ச்சியுடன் செய்வார். ஒருநாள் இரவு இரண்டு மணியிருக்கும். யாரோ ஒரு பெண்மணி அன்னையின் வீட்டிற்கு முன்னால் தரையில் எதையோ பொறுக்கிக் கொண்டிருந்தார். சீடர் ஒருவர், 'யார் அது? இந்த வேளையில் என்ன செய்கிறார்?' எனப் பார்த்தார். அங்கோ அன்னைதான் தரையில் உள்ள கற்களை எடுத்துக் கொண்டிருந்தார். சீடர், 'தாங்கள் இந்த வேளையில் என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டார்.



அன்னையார், 'அது ஒன்றுமில்லையப்பா, கொல்கத்தா மக்கள், காலில் செருப்புப் போட்டு நடந்து பழக்கமானவர்கள். வெறுந்தரையில் நடக்கும்போது இந்தக் கற்கள் அவர்கள் காலைக் குத்துமல்லவா! மற்ற நேரத்தில் பொறுக்கினால் யாரும் என்னை அனுமதிக்க மாட்டார்கள். எனவே தான் இந்த வேளையில் பொறுக்குகிறேன்" என்றார்.

நாமும் 'நாம்' என்ற வட்டத்தைக் கடந்து மற்றவர்களின் நலன், வசதி, மகிழ்ச்சி குறித்துச் சிந்திக்கும்போது நம் மனமும் வாழ்க்கையும் விரிவடையும். இந்த மனிதநேயத்தை அன்னையாரைப் போல நம் இயல்பாக மாற்றிக்கொண்டு நாமும் மகிழ்ச்சியாக இருக்கப் பழகுவோம்.

*ஆக்கம்: சி. சாம்பவி, தரம் 11,*
*இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.*




*அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டுவந்தே தீரும்.*

*அமைதியையும் ஆசிகளையும் தன்னுடன் கொண்டு வராத அன்புச் செயல்கள் உலகத்தில் எதுவுமே இல்லை.*

*- சுவாமி விவேகானந்தர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உணர்ச்சிகளையும் உறவினால் ஏற்படும் உணர்வுகளையும் புறந்தள்ள முடியாமல் வாழ்வின் நோக்கமே ஐம்புலன்கள் மூலம் ஏற்படும் சுகமே என வாழ்வது வாழ்வன்று என இளவயதினிலேயே உணர்ந்தான் கதாதரன். மேலும் தன் வாழ்க்கை, கர்ம பலன்களினால் ஏற்படும் சுகதுக்கங்களைத் தாண்டி நிலையான உண்மையினை அடைய வேண்டும். இதுவே மனித வாழ்வின் உயர்ந்த இலட்சியம். இதற்காக முழுமையான தன் ஆற்றலைச் செலவிட வேண்டும் எனத் தீர்மானித்தான். கதாதரனின் உள்ளத்தில் இருவிதமான வேறுபட்ட சிந்தனைகள் எழும். ஒன்று இறைவனிடம் பரிபூரண சரணாகதியுடன் காவித் துணி அணிந்து வேள்வித் தீயின் அருகில் அமர்ந்து சாதனைகள் செய்வதும் பிச்சை எடுப்பதன் மூலம் பெறப்பட்ட உணவை உட்கொள்வதுமாக எல்லாப் பற்றுகளிலிருந்தும் விடுபட்ட பற்றற்ற வாழ்க்கை வாழ்வது. மற்றையது தன் தந்தையைப்போன்று கடவுளையே நம்பி உலகியலில் ஈடுபட்டு இயன்றவரை தாய்க்கும் குடும்பத்தினருக்கும் உதவுமாறு அவனைத் தூண்டியது. இவ்வாறு இரு வேறுபட்ட வாழ்க்கை முறை -களில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியாமல் அவன் வணங்கும் இறைவனான ஸ்ரீரகுவீரரிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டு அவர் காலத்தினூடாக நல்ல முடிவினைத் தருவார் என நம்பினான்.



காலத்தின் போக்கில் வருடங்கள் கழித்து பதினேழு வயது நிரம்பிய வாலிபனாக மாறினான். இக் காலப்பகுதியில் கல்கத்தாவிலிருந்து கதாதரனின் அண்ணனான இராம்குமார் காமார்புகூர் வந்திருந்தார். அவர், கதாதரன் கல்வியில் கவனம் செலுத்தாது நாடகம், பாட்டு எனக் காலம் கழிப்பதைக் கண்டு மிகவும் கவலை கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் சந்திரமணியுடனும் சகோதரன் இராமேசுவரனுடனும் கதாதரனின் எதிர்கால வாழ்வு குறித்துக் கலந்தாலோசித்துக் கதாதரனைக் கல்கத்தாவிற்கு அழைத்துச் செல்வது என முடிவெடுத்தார். பின்பு ஒருநாள் நல்ல சுப வேளையில் இராம்குமார் கதாதரனை கல்கத்தா அழைத்துச் சென்றார்.

ஒவ்வொரு மனிதனின் இளமைப் பருவத்தில் நடைபெறும் திருப்புமுனையான சம்பவங்கள் அவனின் எதிர்கால வாழ்விற்கு அடித்தளமாக அமைந்து விடுகிறது. அந்த வகையில் கதாதரனிடம் இருந்த ஆன்மீகத் தேடல்களைத் தூண்டி இறைவனை உணர வேண்டும் என்ற தாகத்தினைப் பூர்த்தி செய்து கதாதரனை ஆன்மீகத்தின் வழிகாட்டியாக மாற்றியது கல்கத்தா வாழ்க்கை.

நாம் இதுவரையில் கதாதரனின் இயல்பான ஆன்மீக வெளிப்பாடுகளையும் கிராமம் சார்ந்த வாழ்க்கையின் குறும்புத் தனங்களையும் பார்த்தோம். அடுத்துவரும் பன்னிரண்டு ஆண்டுகளில் அவனது வாழ்க்கை முழுவதும் இறைசாதனையாகவே அமைந்துவிடுகிறது. அவை, அவனது அவதார நோக்கங்களில் ஒன்றான, சீர்குலைந்த சனாதன வழி-பாட்டு முறைகளை மீண்டும் நிலைநாட்டுவதாகவும் பிற மத தர்மங்கள் மூலமும் இறைவனை அடைய முடியும் என்பதை எமக்கு உணர்த்துவதாகவும் அமைந்தன.

கல்கத்தாவிற்கு வந்த ஆரம்பத்திலேயே கதாதரனிடம் பூரணமான சாதகனின் மனநிலை வெளிப்பட்டது. இராம்குமார், கதாதரனைத் தன் பள்ளியில் சமஸ்கிருதம் படிக்குமாறு வற்புறுத்தினார். அதற்கு கதாதரர், 'அரிசியும் வாழைக்காயும் மூட்டை கட்டுவதற்கான கல்வி எனக்கு வேண்டாம். சரியான அறிவைத் தந்து மனிதனை உயர்ந்த குறிக்கோளுக்கு அழைத்துச் செல்கின்ற கல்வியே எனக்குத் தேவை' என்று திட்டவட்டமாகப் பதிலளித்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம்குமார் தன் தம்பியின் அசாதாரணமான மனநிலையைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. கதாதரன் இந்த இள வயதிலேயே சம்சார சாகரத்தில் உழலும் மனிதர்களின் எல்லா வகையான பயனற்ற முயற்சிகளையும், அவர்கள் வாழ்நாள் முழுதும் துன்பப் படுவதன் நோக்கத்தையும் புரிந்து கொண்டுள்ளார் என இராம்குமார் நினைக்கவேயில்லை. ஆனாலும் இராம்குமார் கதாதரனை அவ்வளவாகக் கடிந்து கொள்ளாமல், தன்னுடைய பூஜை வேலைகளைக் கவனிக்குமாறு பணித்தார். கதாதரனுக்குப் பூஜை செய்வது பிடித்தமான செயல் என்பதால் அதில் ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பித்தான். கல்கத்தாவில் இடம்பெற்ற ஏனைய சம்பவங்களை அடுத்து வரும் இதழ்களில் காண்போம்...

*ஆக்கம்: உ. சசிதரன், பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.*

(20ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)



'ஓம்' இன் கடைசி ஒலியையும் உறக்க நிலையையும் பொருத்தி ஒப்பிடக் காரணம் 'ம்' என்பது முடியும் ஒலியாகும். அதேபோல் ஆழ்ந்த உறக்கமும் இளைப்பாறும் மனத்தின் இறுதி நிலை ஆகும். இரண்டு முறை ஓம் சொல்லும் போது இரண்டுக்கும் இடையே கருத்துப் பொதிந்த ஒரு மௌனம் ஏற்படுகிறது. அந்த மௌனத்தின் மேல்தான் நான்காவதான துரிய நிலை ஏற்றி வைக்கப்படுகிறது. இந்த நிலையிலேதான் ஜீவாத்மா, தான் பரமாத்மா என்கின்ற தன்மையை உணர்கிறது. அவ்வாறு அ, உ, ம் என்ற ஒலிகள் சேர்ந்து உருவாகும் ஓம் என்ற மந்திரம் தனியாகவும், ஏனைய மந்திரங்களுடனும் சேர்ந்து வரும்.

*ஆக்கம்: கு. சனாதனி, தரம் 11,*
*இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மைச் சம்பவம்

ஆபிரிக்காவில் தங்கம் மட்டும் கிடைப்பதில்லை; சில தங்கமான மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து விட்டார் இந்தப் பெண்! போட்டியில் வெற்றி பெறுவது போற்றக்கூடியதுதான், ஆனாலும் மனங்களை வெல்வதென்பது அதைவிடப் பெருமைமிக்க ஒன்றாகும். இவ்வாறான ஒரு பெருமையைத் தனது மனிதாபிமானமிக்க செய்கையால் பெற்றுக்கொண்டவர்தான் இவர்.



2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதியன்று, அதாவது இற்றைக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் இதுவாகும். சீனாவில் நடைபெற்ற ஷெங்-காய் சர்வதேச மரதன் (Zheng-kai International Marathon) ஓட்டப் போட்டியில் எல்லைக் கோட்டை அடைய இன்னும் பத்துக் கிலோ-மீற்றர்களே இருந்த நிலையில் முன்னணியில் ஓடிக் கொண்டிருந்தாள் கென்னிய நாட்டு ஓட்ட வீராங்கனை ஜக்லின் கிப்லிமு (Jacqueline Kiplimo). அப்போது அவள் கண்களுக்குத் தென்பட்டான் ஒரு சீன நாட்டு வீரன். அவன் இரு கைகளையும் இழந்த ஒரு மாற்றுத் திறனாளியாக மட்டுமன்றித் தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதனாகவும் காட்சியளித்தான். அந்தச் சமயத்தில் அந்த வீரன் கரையிலிருந்த மக்களையும் சகவீரர்களையும் தண்ணீருக்காக வேண்டிக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தான். அவர்களோ அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. இதையும் அவள் கண்டாள். எந்தவொரு முன்னணி வீரனையும் தாகமெடுக்க வைக்கும் அளவுக்கு அன்றைய காலநிலையும் மிக உஷ்ணமாகவே இருந்தது. அதுவுமல்லாமல் எந்தக் காலநிலையிலும் மரதன் ஓட்டத்தில் பங்கெடுப்பவர்கள் தண்ணீர் குடிக்காமல் ஓடுவது என்பது சாத்தியமற்றது.

### தாகித்தவர்களுக்குத் தண்ணீராக இரு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கால்கள் வேகமெடுத்து ஓடுவது போலவே இந்தக் காட்சிகளும் எண்ணங்களும் அவள் மனதில் ஓடின. எப்படியாவது அவனுக்கு உதவி செய்ய வேணடும் என்ற ஆவல் அவளுள் எழுந்தது. அதே நேரம் போட்டியில் வென்றுவிடவேண்டும் என்ற ஆவலும் ஏற்பட்டது. எதைச் செய்வது என்ற போராட்டத்துடன் அவள் ஓடிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் கால்களோ அவனின் வேகத்திற்கேற்ப தானாகவே வேகத்தைக் குறைத்தது. அவள் கண்களோ நீரைத் தேடி அலைந்தன. இதிலிருந்தே அவள் அவனுக்கு உதவி செய்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டாள் என்பது தெரிந்தது. பின் அவள் சிறிதும் தாமதிக்காமல் தண்ணீரைத் தேடிப் பெற்று, கைகள் இரண்டையும் இழந்த அந்த மாற்றுத் திறனாளிக்குத் தன் கைகளால் தண்ணீர் குடிப்பதற்கு உதவினாள். இதனால் தனக்கு இருந்த மிகுதி நேரத்தில் சில நிமிடங்களை இழந்து கொண்டிருப்பதையும் அவள் பொருட்படுத்தவில்லை.



இதன் பின் எல்லைக் கோட்டை அடைவதற்கு இன்னும் மிகக் குறுகிய தூரமே இருக்கும் நிலையில் அவள் மீண்டும் வேகத்துடன் ஓடத் தொடங்கினாள். இருப்பினும் அவளை முந்திச் சென்ற சக கென்னிய வீராங்கனை முதல் இடத்தைத் தட்டிச் சென்றாள். இதனால் கிப்லிமு-விற்கு இரண்டாம் இடமே கிடைத்தது. அது மட்டுமல்லாமல் 13 இலட்சம் ரூபாய் (US $10,000) பரிசுத் தொகையையும் இழக்க வேண்டி ஏற்பட்டது. ஆனால் அவளது கருத்தானது, "முதலிடத்தைப் பெறுவதென்பது தனக்கு முக்கியமானதாக இருந்த போதிலும், தாகத்தால் தவித்த அந்த மாற்றுத் திறனாளிக்கு உதவி செய்யாமல் தன்னால் மேலும் முன்னேற முடியவில்லை" என்பதாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி முடிந்ததும் அந்த சீன வீரர் கிப்லிமுவைச் சந்தித்து மகிழ்ச்சியுடன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன் தனது குடும்பத்தினரையும் அறிமுகப்படுத்தினார். அவர்களும் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டாலும், மொழி வேறுபாட்டின் காரணமாக அவர்களால் மேலும் உரையாட முடியவில்லை.

ஓட்ட வீரரான தனது கணவருடனும் குழந்தையுடனும் வாழும் கிப்லிமுவிற்குக் கணவரின் ஆதரவு பக்க பலமாக இருப்பினும் தனது பயிற்சிகளை மேற்கொள்வதற்கும், உடல்நலத்தைப் பேணுவதற்கும் போதுமான நிதியுதவியைப் பெற்றுக் கொள்வது சவாலாகவே உள்ளது. இந்நிலையில் 13 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையை இழப்பதென்பது சாதாரண விடயமல்ல. இருப்பினும் "அவருக்கு உதவி செய்தமைக்காக நான் என்றுமே வருத்தப்படவில்லை. என்னைப் பொறுத்தவரையில் அவர் எனக்கு அறிமுகமில்லாதவராக இருப்பினும், என்னுடைய உதவி தேவைப்பட்ட ஒருவராகவே எனக்குத் தெரிந்தார்" என்று நெகிழ்ந்து கூறுகிறார் கிப்லிமு.

2004ம் ஆண்டு பாடசாலையில் கல்வி கற்கும் போதே ஆர்வத்துடன் ஓட்டப் பந்தயங்களில் பங்குபற்றிய கிப்லிமு பின்பு நெடுந்தூர ஓட்டங்களில் தேர்ச்சி பெற்று தற்போது 42 கிலோமீற்றர் வரையான ஓட்டப் பந்தயங்களில் முன்னணி வீராங்கனையாகத் திகழ்கிறார். இவர் மரதன் ஓட்டத்தில் பல பட்டங்களை வென்றுள்ளார்.



"ஒற்றுமையாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் ஒருவருக்கு உதவி செய்வதற்கு அவர் உங்களுக்கு அறிமுகமானவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவரது தேவையை அவரவரது நிலையிலிருந்து உணருங்கள்; உங்களால் முடிந்தவரை உதவி செய்யுங்கள். ஏனெனில் அது இறைவனால் உங்களுக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பமாகும்" இதுவே கிப்லிமு அனைவருக்கும் விடுக்கும் வேண்டுகோளாகும். ஓஓஓ

*ஆக்கம்: த. கௌரீஸ்வரி, பழைய மாணவி (தொண்டராசிரியை), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐதரேய உபநிடதம்

சென்ற இதழில் மாண்டூக்ய உபநிடதத்தைப் பற்றிப் பார்த்த நாம் இந்த இதழில் ஐதரேய உபநிடதத்தின் மீது எமது கவனத்தைச் செலுத்துவோம்.



இவ் உபநிடதம், இருக்கு வேதத்தின் ஐதரேய ஆரண்யகத்தின் இரண்டாம் பகுதியில் அமைந்துள்ளது. மஹீதாச ஐதரேயர் என்ற முனிவரே இவ் உபநிடதத்தை அருளியிருக்கிறார். ஐதரேய உபநிடதம் என்ற பெயர் வர இதுவும் காரணமாய் இருந்திருக்கலாம்.

இந்த உபநிடதத்தின் முதலாவது அத்தியாயம் கடவுள் மனிதனையும் உணவையும் படைத்தது பற்றிக் கூறுகிறது. இரண்டாவது அத்தியாயமானது எவ்வாறு கடவுள் மனிதனுள் புகுந்து 'உயிர் உருவாதல்' ஆகிய அதிசயச் செயலைப் புரிகிறார் என்பதை விவரிக்கிறது. இரண்டாவது அத்தியாயம் மனிதனில் ஆன்மாவாக விளங்குகின்ற பேருணர்வுப் பொருளே பிரபஞ்சத்தில் இறைவனாக விளங்குகிறார் என்பதை விளக்குகிறது.


**⇒ 1ஆவது அத்தியாயம்**

படைப்புப் பற்றி ஆராயும்போது ஒவ்வொரு உபநிடதமும் ஒவ்வொரு கோணத்தில் ஆராய்கிறது. அந்த வகையில் ஐதரேய உபநிடதத்தின் கருத்தைக் காண்போம். ஆரம்பத்தில் கடவுள் என்ற ஒருவர் மட்டுமே இருந்தார். உலகங்களைப் படைக்க வேண்டும் என எண்ணிய அவர் அம்பலோகம் (சொர்க்கத்திற்கு மேலே உள்ள தண்ணீர் உலகம்), சொர்க்கலோகம் (தேவர்கள் வாழும் உலகம்), மரீசிலோகம் (பூமிக்குமேல் உள்ள இடைவெளி),




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரலோகம் (மனிதர்கள் வாழும் உலகம்) மற்றும் ஆபலோகம் (பூமிக்குக் கீழ் இருக்கும் நீர் நிறைந்த பாதாள உலகம்) எனும் ஐந்து உலகங்களைப் படைத்தார்.



அடுத்ததாக ஐந்து அடிப்படை மூலங்களையும் (பஞ்சபூதங்கள்) திரட்டி பிரம்மதேவனை உருவாக்கினார் இறைவன். இவரிலிருந்தே படைப்பு ஆரம்பமாயிற்று. மனிதனும் மற்ற உயிரினங்களும் அந்த ஐந்து அடிப்படை மூலங்களிலிருந்தே உருவாக்கப்பட்டனர்.





கடவுள் பிரம்மதேவனைப் பற்றிச் சிந்தித்தார். அவ் வேளையில் வாய், மூக்கு, கண்கள், காதுகள், தோல் ஆகியன தோன்றின. அவை பிரிந்து முறையே பேச்சும், அதிலிருந்து நெருப்பும் மூச்சும், அதிலிருந்து காற்றும் பார்வையும், அதிலிருந்து சூரியனும் கேட்கும் தன்மையும், அதிலிருந்து திசைகளும் முடிகளும், அதிலிருந்து மூலிகைச் செடிகளும் தோன்றின. உலகம் எவ்வாறு படைக்கப்பட்டது என்பதை இது காட்டுகிறது.

மனிதனும் இயற்கையும் எவ்வாறு ஒன்றுக்கொன்று சார்ந்து வாழ்கிறது என்பதைப் பார்ப்போம். படைக்கப்பட்டவற்றை பசி, தாகத்துக்கு பிரம்மதேவன் ஆளாக்கினார். அவர்களைத் திருப்திப் படுத்த அவர் கொண்டு வந்த பசுவும் குதிரையும் அவர்களுக்குப் போதவில்லை. அதனால் மனிதனை பிரம்மதேவன் அழைத்து வந்தார். மனிதனில் திருப்தியடைந்த அவை அவனுள் புகுந்தன. பிரம்ம தேவனிலிருந்து தோன்றிய இயற்கை அம்சங்கள் எதிர்வரிசைக் கிரமத்தில் மனிதனுள் புகுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது பிரம்மதேவனின் வாயிலிருந்து வெளிவந்தி பேச்சிலிருந்து நெருப்புத் தோன்றியது. மீண்டும் நெருப்பு பேச்சாகி மனிதனின் வாயில் புகுந்தது.

இறைவனிலிருந்து பிரம்ம தேவன், பிரம்ம தேவனிலிருந்து இயற்கை, இயற்கையிலிருந்து மனிதன் என்று படைப்பு நிகழ்ந்ததாக நாம் இங்கு காண்கிறோம்.



இறைவன் → பிரம்மா → இயற்கை → மனிதன்

**'கட்டிடங்களுள் தாஜ்மஹால் போல் கோயில்களுள் மனிதனே சிறந்தவன்'** என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது.

உலகையும் அதனை வழிநடத்துவதற்காக தேவர்களையும் உணவையும் படைத்த கடவுள் மனிதனில் புக நினைத்தார். ஜடப்பொருளாக உள்ள உடம்பு - உயிர் தொகுதியில் எந்த வழியாக நுழைந்து அதனை இயங்க வைப்பது என நினைத்த கடவுள் உச்சந்தலை வழியாக உட்புகுந்தார். அவ்வாறு பிறந்த மனிதன் அறியாமையால் தன் உண்மை இயல்பை மறந்து மற்ற உயிரினங்களையும் உலகையும் பற்றிச் சிந்திப்பதில் நாட்களைச் செலவிட்டான். ஆனால் அறியாமை நீங்கி, அனுபூதி பெறும் காலம் வந்தது. அப்போது தன்னுள் உறையும் ஆன்மாவே எங்கும் நிறைந்த கடவுளாக இருப்பதையும் கண்டான்.



'கடவுள்' என்ற சொல் 'கடந்து உள் நிற்பவர்' என்று பொருள்படும். கடவுளும் தேவர்களும் மறைந்திருப்பதையே விரும்புகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் தன்னை மறைத்துக் கொண்டு செய்கின்ற செயல்தான் மிகவுயர்ந்த பலனைத் தருகிறது. 'இறைவன் தம்மை மறைத்துக் கொண்டிருக்கிறார்; அதாவது செயல் மகோன்னதமாக இருக்கிறது' என்று அற்புதமாக சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார்.



*ஆக்கம்: ஜெ. காயத்திரி, தரம் 10,*
*இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.*

(19ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)



நகரத்திற்கு வெளியே ஒரு சிறுகுடிசைக்குள் துறவி நுழைந்தார். அங்கே ஒரு கிழவி ஆட்டுக் கல்லில் மா அரைத்துக்கொண்டிருந்தாள். பலகாரம் செய்து பிழைத்து வரும் குடும்பம் அது. அரசனுக்கு அந்தக் கல்லைக் காட்டிய துறவி,"மன்னா, உன்னிடம் இருக்கும் வைரக்கல்லைக் காப்பாற்ற நீயோ நிறையச் செலவு செய்கிறாய். அக்கல்லால் வருமானமும் இல்லையென்கிறாய். ஆனால் இந்தக் கல்லோ இடைவிடாமல் உழைத்து, இந்தக்குடும்பத்தையே காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. இதுதானே விலையுயர்ந்த கல்?" என்றார். அரசன் தனது தற்பெருமையை நினைத்து வருந்தி, துறவியிடம் மன்னிப்புக் கோரினான்.



ஒரு பொருளின் பெறுமதி அதன் உபயோகத்தில்தான் இருக்கிறதே ஒழிய அப் பொருளின் பகட்டான ஆடம்பரத்தில் இல்லை. மனிதர்களிலும் ஆடம்பரமாக வாழ்பவர்களை விட, பிறருக்கு உபயோகமாக வாழ்பவர்களே உண்மையில் பெறுமதி மிக்கவர்கள்.

*நன்றி: பக்தி விஜயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்திகள்

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினமாகிய ஜனவரி 12ஆம் திகதி அன்று எமது சமயபாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இடம்பெற்றது. இதன்போது பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு சு. கிருஷ்ணகுமார் அவர்கள் அறநெறி அமுதத்தின் 14ஆவது அமுதத்தின் 1ஆவது துளியை வெளியிட்டுவைத்தார். இவ் இதழ் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி சிறப்பிதழாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.


உழவர் திருநாளாகிய தைப் பொங்கல் ஜனவரி 14ஆம் திகதி ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டது.

இளைஞருக்கெல்லாம் முன்மாதிரியாய்த் திகழ்ந்த சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினம் ஜனவரி 23ஆம் திகதி பஜனை, அர்ச்சனை, ஆரதி, ஓமம் என்பவற்றுடன் அனுஷ்டிக்கப்பட்டது.






சிவனை வழிபட மிகச் சிறந்த நாளாகிய சிவராத்திரி தினம் பெப்ரவரி 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. பக்தர்கள் இரவு முழுதும் விழித்திருந்து தோத்திரப் பாடல்களையும் வேத மந்திரங்களையும் உச்சாடனம் செய்தவாறு கண்விழித்தனர். அத்துடன் நான்கு சாமங்களிலும் தமது கைகளாலேயே சிவலிங்கத்திற்கு வில்வம் இட்டு வழிபடும் பாக்கியம் பெற்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக மக்களின் ஆன்மீக விழிப்புணர்வைத் தூண்டுவதற்காக மனித உருவில் அவதரித்த பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் (குருதேவரின்) ஜெயந்தி தினம் மார்ச் 3ஆம் திகதி பஜனை, அர்ச்சனை, ஆரதி, ஓமம் என்பவற்றுடன் ஆச்சிரமத்தில் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. மார்ச் 23ஆம் திகதி சமய பாடசாலை மாணவர்கள் குருதேவரின் ஜெயந்தியைக் கொண்டாடினர். இதன்போது வீதி பஜனை, மகான்களின் வேடமிட்ட மாணவர்கள் சகிதம் குரு-தேவரின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் நான்கு மதங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் சர்வமத நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. இவ் விழாவிற்கு தமிழ்நாடு - தியாகராஜ நகரிலுள்ள இராமகிருஷ்ண மிஷனின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி பத்மஸ்தானந்தஜி மஹராஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.









நாமசங்கீர்த்தனத்தால் இறைவனை அடையும் வழியை எடுத்துக்காட்டிய சைத்தன்ய மகா பிரபுவின் ஜெயந்தி தினம் மார்ச் 16ஆம் திகதி ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

குருதேவரின் நேரடிச் சீடர்களான பிரம்மானந்தர், திரிகுணாதீதானந்தர், அத்புதானந்தர், யோகானந்தர் ஆகியோரின் ஜெயந்தி தினங்கள் முறையே பெப்ரவரி 1, 3, 14, மார்ச் 20 ஆகிய தினங்களில் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கு அருகிலுள்ள முல்லோயா தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜெயந்தி தினத்தை மார்ச் 29ஆம் திகதி கொண்டாடினர். இந் நிகழ்வில் எமது சமய பாடசாலைப் பொறுப்பாளரான ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மஹராஜும் சமய பாடசாலைத் தொண்டர்களும் கலந்து கொண்டு பஜனை, உரை ஆகிய நிகழ்வுகளால் சிறப்பித்தனர். அத்துடன் ஆன்மீகப் புத்தகக் கண்காட்சியையும் நடத்தினர்.








தந்தை சொல் தட்டாத தனையனாகிய இராம பிரானின் ஜெயந்தியாகிய இராம நவமி ஏப்ரல் 8ஆம் திகதி இராமநாம சங்கீர்த்தனத்துடன் அனுஷ்டிக்கப்பட்டது.

ஏப்ரல் 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டது.

இரத்மலானை ஸ்ரீ இராமகிருஷ்ண அறநெறிப் பாடசாலை மாணவர்களால் இராமகிருஷ்ண ஜெயந்தி ஏப்ரல் 12ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வில் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மஹராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்குப் பரிசில் வழங்கி ஊக்குவித்தார். அத்துடன் எமது சமய பாடசாலை ஆசிரியர்களும் தன்னார்வத் தொண்டர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## உங்கள் கருத்து



இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை அண்ணளவாக 100 சொற்களில் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழின் 'படம் தரும் பாடம்' பகுதியில் பிரசுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழில் ' உங்கள் கருத்து' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட படத்திற்கு கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த தரம் 4 மாணவன் தி. **சன்ஜெய்** ஆசிரியரின் உதவியுடன் எழுதி அனுப்பிய கருத்து...



## படம் தரும் பாடம்


இந்தப் படத்தைப் பாருங்கள். இந்தப் படம் என்ன சொல்லுகிறது? கால் ஊனமுற்ற ஒரு முதியவர் வயிற்றுப் பிழைப்புக்காக வீதி செப்பனிடும் வேலையில் ஈடுபட்டுள்ளதைப் புலப்படுத்துகிறது. "என் உடலில் தான் ஊனம் உழைப்பில் இல்லை" என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த முதியவரின் முயற்சியையும் ஆற்றலையும் கண்டு மனதால் ஊனப்பட்ட நாங்கள் சிந்திக்க வேண்டும்.

புலனிலோ அங்கத்திலோ குறைவுபட்டிருந்தாலும் தமது ஆற்றலில் குறைவுபடவில்லை என்பதை நிரூபித்துக் காட்டியவர்கள் பலர். ஆகவே அங்கக் குறைபாடு உடையவர்கள் எவரும் தமது ஆற்றலையும் உழைப்பையும் கைவிடாது மனத் தைரியத்துடன் பாதைகள் வகுத்துப் பயணம் நடத்துவதே வாழ்க்கையைப் பயனுள்ளதாக மாற்றும். எனவே தைரியத்தைத் தனதாக்கி நடந்தால் நாளை நமதே.

'சோம்பும் உள்ளம் பிசாசின் தொழிற்சாலை' என்று ஆங்கிலப் பழமொழி வர்ணிக்கிறது. ஆகவே சோம்பியிராது மனத் தைரியத்துடன் செய்யப்படும் தளராத முயற்சி உயர்வு தரும். குறையிலும் நிறைவு கண்டால் மனித மனம் நிறைவு பெறும். ஆகவே அவனியில் குறையென்பது நம் ஒவ்வொருவரின் கண்ணோட்டத்தின் நிறைவிலேயே தங்கியுள்ளது. எனவே மாற்றுத் திறனாளிகளைப் புறக் கண்ணால் நோக்காது அகக் கண்ணால் நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...



உலகப் புகழ் பெற்ற அறிவியல் அறிஞர் தோமஸ் அல்வா எடிசன். அவர் எண்பது வயதைத் தாண்டிய பிறகும் தன்னுடைய அறிவியல் ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுவந்தார்.

ஒருநாள் அவர் தனது வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது அவருடைய ஆய்வுகூடம் தீப்பற்றி எரிவதாகச் செய்தி வந்தது.

ஆனால் அவர் சிறிதும் பதற்றமடையாமல் அமைதியாகத் தன் மனைவியையும் மகனையும் அழைத்துக்கொண்டு ஆய்வுகூடம் இருந்த இடத்திற்குச் சென்றார். அங்கு சென்றபோது அது முழுமையாக எரிந்து முடிந்திருந்தது. அவருடைய மனைவி அதிர்ச்சி அடைந்தார். மனைவிக்குச் சிரித்தபடி ஆறுதல் கூறிய எடிசன், "நடந்து முடிந்து போனதைப்பற்றி இனிக் கவலைப்பட்டு என்ன பயன்? இனி நடக்க வேண்டியதைக் கவனிப்போம்" என்று கூறிவிட்டு மனைவி, மகனை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார்.

வீட்டில் மகனிடம், "இது பழைய கட்டிடம். புதிய தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கவேண்டும் என்றேன் அல்லவா? அதற்கு இப்போது வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது" என்று கூறிக்கொண்டே அதற்கான வரைபடத்தை வரைய ஆரம்பித்துவிட்டார்.

பேரிழப்பு ஏற்பட்டிருந்தாலும், திரும்பிப் பெற முடியாததைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் அடுத்துச் செய்ய வேண்டிய செயலில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும். சிறு வயது முதலே இப் பழக்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் பல மகத்தான சாதனைகளை நோக்கி முன்னேற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு ரூ. 10.00